முருகப்பெருமான் துணை

**மகான் ஜனாதனர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.02.2024**, செவ்வாய்கிழமை

1. ஆறுமுகனார் வழிபாடுதனை
அகிலம் பின்பற்ற வகைசெய்து
மாறுதலை உலகினில் புரியவே
மாதவசியாக வந்த அரங்கா
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது சால் திங்கள்
வரங்களென அட்டம திகதி குசன்வாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 08 ம் நாள், 20.02.2024, செவ்வாய்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை ஜனாதனர் யானும்
அருளுவேன் உலகநலம்பெற
ஆசிதந்து உலகை மீட்க
ஆற்றல்மிக்க ஞானயுகம் படைக்க
4. படைக்கவே சுப்பிரமண்யர் ஞானம்
பிரணவக் குடில் படைத்து அருள
தடையின்றி கலியுக மக்கள்
தவசி அரங்கமகா ஞானியை
5. ஞானியை குருவாய் ஏற்று
நம்பிக்கை வைத்து வருக
இனிமைபட மாற்றம் கூடி
எவ்வுயிரும் தம் உயிராய் கருதி
6. கருதியே உலக பேதமகற்றி
கருணைபட வாழ நேரும்
தருமவான்களை சக்தி கூட
தரணியில் அரங்கன் அன்னதான
7. அன்னதான சேவை துவக்கி
ஆற்றல்பட தருமசாலைபல
மண்ணுலகில் கிளைகளாக்கி
மாதருமம் வளர்த்து வருக

8. வருகவே அன்னதானம் வழி
வழிமொழிந்து பொருளுதவி செய்து
தரும சேவையில் கலந்து வர
தக்கபடி தொண்டாற்றி இணைந்து

9. இணைந்து அரங்கன் வழி
ஈடுபாடு கூட்டித் தொடர
இணையிலா தரும பலத்தால்
இயம்பிடுவேன் வேலவன் சக்தி

10. சக்தி இறங்கி காப்புமே
சகலருக்கும் கவசமாகி
சக்திபரவி அகிலமெங்கிலும்
சாற்றிட தரும வேலி கண்டு

11. கண்டுமே ஞானவான்கள் பெருக
கலியுகம் ஞானயுகமாக மாற்றம்
உண்டாகி ஞானத்தலைமையும்
உயர்வான ஞானிகள் ஆட்சியும் மலரும்

துல்லிய ஆசி முற்றே

—சுபம்—